உ
சிவமயம்



# சைவசமய வழிபாடு





வெளியீடு
அருள்மிகு பெரியதம்பிரான் கோயில்
மொட்டயன்குளம், கிராஞ்சி,
பூநகரி.

ஈழவூர் சைவப்புலவர்
சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா (MA.JP)



19.09.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சைவசமய

# வழிபாடு











வெளியீடு

அருள்மிகு பெரியதம்பிரான் கோயில்

மொட்டயன்குளம், கிராஞ்சி, பூநகரி

ஈழவூர் சைவப்புலவர்

சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா (MA, JP)

**19.09.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Thavathiru
Vadivel Swamy

# மகாதேவ ஆச்சிரமம்



Srimath
Ganeshanantha Swamy

Thavathiru Ganesanantha
Mahadeva Swamigal,
MAHADEVA ASHRAM
Jeyanthinagar
Kilinochchi (Sri Lanka)
Peoples Bank, Kilinochchi A/C No :13704

தவத்திரு
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி,
இலங்கை
15.09.2016

## ஆசியுரை



அன்பேசிவம்

திருவருள் மிகு மொட்டயன் குளம் பெரியதம்பிரான் கோயில் 08.09.2016 துர்முகி வருடம் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நிகழ்ந்தமை அறிந்து பெருமகிழ்வடைகின்றோம். ''ஒன்று சேர்ந்தால் உண்டுவாழ்வு'' என்ற மகாவாக்கியத்தை உறுதி செய்துள்ளனர். பூசகர்கள், ஊர் மக்கள், நெறிப்படுத்துனர்கள், தொண்டர்கள், கட்டடி, கூரை வேலைகள் செய்வோர் ஒன்றிணைந்த காரணத்தால் மூன்றுமாத காலத்தில் திருப்பணி வேலைகள் சிறப்புற நிறைவாகியது பெரியதம்பிரான் திருவருளேயாகும். இவ்வகையில் கும்பாபிஷேகக் கிரியைகளை நெறிப்படுத்திய சிவஸ்ரீ. குமார் சுமுகலிங்கம் ஹுருவரதன் ஐயா அவர்கள், வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் திருவருள் துணை கொண்டு நிறைவாக்கியமை போற்றுதலுக்குரிய விடயமாகும். சங்காபிஷேக தினத்தன்று ***"சைவசமய வழிபாடு"*** என்னும் நூல் வெளிவர இருப்பது சைவ மக்களுக்குப் பேருதவியாக இருக்கும். எல்லாம் வல்ல பரம்பொருளின் பெரும்புகழை அனைவரும் போற்றி வழிபாடு செய்து பேரின்பப் பெருவாழ்வு பெறவேண்டும் என்று வாழ்த்தி குருபாதம் பணிந்து ஆசிகூறுவதும் அவனருளேயாகும்.

**வணக்கத்திற்குரிய**
**தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள்**
**பீடாதிபதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

....../....../20......

## ஆசியுரை

### ஓம் நமசிவாய சிவாயநம ஓம்

ஆன்மாக்கள் நன்னெறிப்படும் இடம் ஆலயம் ஆகும். ஆன்மாக்கள் நன்னெறிப்படுத்துவதற்கு சமய, சமூக நிறுவனங்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டிய காலமாக சமகாலம் அமைந்துள்ளது. சைவத்தமிழ் மக்கள் வழிபாட்டிற்கு மொட்டயன்குளம் பதியில் பெரியதம்பிரான் ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் நிகழ்ந்தது வரலாற்றுச் சிறப்பம்சமாகும். கோயில் கும்பாபிஷேகப் பெருவிழாவில் பெருமளவில் அடியார்கள் ஒன்று சேர்வார்கள். நித்திய வழிபாட்டுக்குரிய ***"சைவசமய வழிபாடு"*** என்னும் அருள் நூல் வெளியீடு செய்வது அறிந்து பெருமகிழ்வடைந்து ஆசிகூறுகின்றேன். இச்செயற்பாட்டை முன்னெடுத்து வரும் சைவப்புலவர் சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா அவர்களின் முயற்சியைப் பாராட்ட வேண்டியதும் கடப்பாடாகும். இறைபணி தொடர்த ஆலய பூசகர்கள் ந.சுகுமார், ச.விஜயராசா ஆகியோரின் முயற்சி இன்று ஆலயமாக இப்பதியில் காட்சி கொடுப்பது இறைவன் திருவருளேயாகும். இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் நல்லாசி கூறி அமைகின்றேன்.

அன்பே சிவம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10th LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

# ஆசியுரை

16.09.2016 துர்முகி வருடம் மொட்டயன்குளம் பதியில் பெரியதம்பிரான் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக நிறைவாகியது திருவருள் கடாட்சமேயாகும். இச்சிறப்பிற்கு வரலாற்று ஆவணமாக **"சைவசமய வழிபாடு"** என்னும் நூல் வெளிவருவது அறிந்து பெருமகிழ்வு அடைகின்றேன். இந்நூலானது நித்திய வழிபாட்டுக்கு உரியவையாக அமைந்திருக்கின்றமையும் தனித்துவமான சிறப்பம்சமாகும்.

இவ்வகைச் சிறப்புக்கள் யாவும் பெரியதம்பிரான் திருவருளேயாகும். இப்பணியில் ஈடுபட்ட சிவப்பணியாளர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்களாவர். இப்பணிகளுக்கெல்லாம் குருவருளே முன்னிற்பதாகும். அவ்வகையில் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தா அவர்களையும் ஆசிவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

**இறைபணியில்**
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ஜா**
**வதிவிட ஆச்சார்யார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221595, 021 2280024
Mobile : 077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221595, 021 2280024
Mobile : 077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

2016.09.13,

**வாழ்த்துச் செய்தி.**

கிராஞ்சி, மொட்டையன்குளம் பதியில் பெரிய தம்பிரான் கோயில் அமைத்து மகா கும்பாபிசேகம் நிறைவாகியது அறிந்து பெருமகிழ்வு அடைகிறேன். சைவத்தமிழ் கலாசாரப் பின்னணியில் தெளிவாக மக்களை நெறிப்படுத்துபவை ஆலயங்களேயாகும்.

இவ்வரிய முயற்சியில், ஈடுபட்ட ஆலய பூசகர்கள், திருப்பணியாளர்கள் இவற்றை ஒழுங்கமைத்து நெறிப்படுத்திய சமயப்பெரியோர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் ஆவர். கும்பாபிஷேகப் பெருவிழாவைச் சிறந்தமுறையில் கிரியைகளையும் அதற்குரிய விளக்கங்களையும் உடனுக்குடன் தெளிவுபடுத்திச் செய்தமையை அறிந்தேன். 'இவையாவும் சிவன் திருவருள் கைகூடும் போது நிறைவாகும்'.

'எப்போதோ முடிந்த காரியம்' என்ற சித்தர் வாக்கு இதனைத்தான் எமக்கு உணர்த்துகின்றது. இவை யாவும் உணர்ந்து அதன்வழி செல்ல, மக்களின் மனம் மாற்றம் பெற வேண்டும். புலன் வழிநிற்றல் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஒருபோதும் நற்செயலாக அமையாது என்பதை ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டும். இறையருள் இன்றி இச்சிந்தனை கை வர மாட்டாது.

அனைத்து மக்களும் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற மகா வாக்கியத்தை "திருக்கோயில் இல்லாத திருவிலூரும்......" என்ற தேவாரப் பாடல் அழகு உணர்த்துகிறது. மூலமலம் முன்நிற்கும் போது உணரவிடாது அதை தடுத்து நிற்கும். எனவே ஆலயம் அமைத்து அனைத்து அடியார்களும் வழிபாடு செய்து மூல மலம் ஒடுக்கம் பெற்று இறையருள் பெறும் நிலைக்கு மாற்றம் பெற வேண்டும். இவ்வாறு மூலமலம் ஒடுங்கும்போது இறையருள் தெளிவாகத் தொழிற்படும். சாந்தி சமாதானம் நிலைபேறாக அமையும் என்பதனை உணர்ந்து இவ்வரிய கைங்கரியத்தை செய்து, செய்வித்த அத்தனை உள்ளங்களுக்கும் பெரிய தம்பிரானாக திருவுருக்கொண்ட ஆதிசிவன் திருவருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துக் கூறுவதும் அவாவுறுவோம். இப்பணியை ஆவணமாக மாற்றும் சைவப்புலவர் சிவ ஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா அவர்களின் சிவப்பணி தன்னலம் கருதாப்பணி என்பது இந்த நூல் வெளிவருவதனூடாக உணர முடிகின்றது.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

சி. சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

**"WORLD SAIVA MISSION" - SRILANKA**

"Excellent Service Mission for humanity"

**உலக சைவத்திருச்சபை - இலங்கை**

ලෝක සේව ශරු සභාව - ශ්‍රී ලංකාව

பெருங்குளம், சாங்கத்தானை வீதி, சாவகச்சேரி.

பதிவு இல - HA/4/JA/332 வங்கி க.இல - 79062402. இலங்கை வங்கி சாவகச்சேரி. T.P - 0775835372

# வாழ்த்துரை

அருள்மிகு மொட்டயன்குளம் பெரியதம்பிரான் ஆலய துர்முகி வருட கும்பாபிஷேகப் பெருவிழா கந்தன் கருணை கொண்டு சிறப்புற அமைய பணிசெய்தவர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்களாவர். இவர்கள் பணி அர்ப்பணிப்பான, தெய்வீகமான, ஆன்மார்த்தமான பெரும்பணியாகும். இவர்களின் ஆன்மீகப் பயணம் நான்கு மார்க்கங்கள் ஊடாகவும் படிமுறையாக உயர்ந்து வருகின்றது. இப்பணியை முன்னெடுக்கும் போது அனைவரும் மனம் கோணாது பங்கெடுக்க முன்வர வேண்டும். இன்று வெளியீடு செய்யும் "சைவசமய வழிபாடு" என்ற அருள்நூல் வரலாற்று ஆவணமாக உங்கள் கரங்களில் பெரியதம்பிரான் தருகின்றான் என்பதனை உணர வேண்டும். இம்முயற்சிகளில் அனைவரும் கருவிகளே, உட்பொருள் "பெரியதம்பிரான் கருணையே" என்பதுணர வேண்டும். "கோபம் அழிவைக் கொடுக்கும்" பாபத்தைத் தேடும் பணிவு உயர்வைக் கொடுக்கும். விட்டுக்கொடுப்பு உண்மையை உணர வைக்கும் என்பதுண்மை. இவற்றுக்கு மனிதன் மதிப்பழித்து வாழ வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துரை வழங்குகின்றேன்.

சுரேஸ் மோட்டோர்ஸ்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

ஸ்ரீஸ்கந்தராசா சுரேஸ்
சமய சமூக சேவை இணைப்பாளர் - இலங்கை
உலக சைவத்திருச்சபை - இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிவபுரம் அருள்மிகு சிவசுப்பிரமணிய**

**தேவஸ்தானம்**

**சிவபுரம், கிராஞ்சி, பூநகரி.**

# பாராட்டுரை

இறைவன் எங்கும் சர்வவியாபகமாக மலர்ந்துள்ளான். சைவத்தமிழ் மக்களின் பண்பாடு வளரும் இடம் ஆலயமாகும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதற்கு அமையவே இன்று கோயில்களும் குடிகளும் பின்னிப்பிணைந்து அமைந்துள்ளன. மொட்டயன்குளம் பெரியதம்பிரான் கோயில் அமைவிடம் இதற்கோர் முன்னுதாரணமாக அமைகின்றது. கும்பாபிஷேகப் பெருவிழா என்றால் அடியார்களால் ஆலய வளாகம் நிறைந்துவிடும். இவ்வகையில் மொட்டயன்குளம் பதியில் பெரியதம்பிரான் ஆலய அமைப்பில் ஈடுபட்ட ந.சுகுமார், ச.விஜயராஜா, சி.சிவஞானசுந்தரம், வரதராஜா, றூபன், து.வரதன், நடேசு குடும்பத்தினர், கச்சன், (நாகேந்திரன்) கெங்கன் ஆகியோர் அயராது உழைத்த காரணத்தினால் இப்பணி சிறப்புற அமைந்துள்ளது. இக்கும்பாபிஷேகத்தை இயன்றளவும் சிறப்புற நிறைவாக்கிய சிவஸ்ரீ. குமார் சுமுகலிங்கம் ஹுருவரதன் ஐயா அவர்களின் சிவப்பணி வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகப் பெருமான் துணைகொண்ட பெரும்பணியாகும். என்பவற்றை உணர்ந்து இப்பாராட்டுக்களைத் தெரிவிப்பதும் சிவபுரக் கந்தன் கருணையேயாகும். இப்பணி தொடர வேண்டுமென பிரார்த்தித்து பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**சிவஸ்ரீ. தி.பாலசுப்பிரமணியம் ஐயா**
**சிவபுரம் அருள்மிகு சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்.**
**சிவபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரிப் பிரதேச செயலர் அவர்களின்

## வாழ்த்துச்செய்தி

பூநகரிப் பிரதேசத்தில் கிராஞ்சி, மொட்டயன்குளம் பதியில் புதிதாக பெரியதம்பிரான் ஆலயம் அமைத்து, புதிதாக விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா நிறைவாகியது இறைவன் திருவருளேயாகும். பல ஆண்டுகளுக்குப் பின்னர் மொட்டயன்குள விவசாயக் குடியேற்றக் கிராமத்தில் ஆலயம் ஒன்று அமைந்திருப்பது மக்களின் வாழ்வியலை மேம்படுத்த சிறந்த சிவப்பணியாக அமைகின்றது. இப்பணியில் ஈடுபட்ட அனைவரும் மென்மேலும் இப்பணியைத் தொடர வேண்டும் எனவும், இப்பணிக்கான ஆவணமாக "சைவசமய வழிபாடு" என்னும் நூல் வெளிவருவதும் காலத்தின் கட்டாய தேவையாக அமைகின்றது. இவற்றுக்கெல்லாம் திருவருள் கைகூடியது அனைவரின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த நற்பேறாகும். இவ்வரிய கைங்கரியத்தை நிறைவாக்கிய அனைத்து உள்ளங்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**சி.ச.கிருஸ்ணேந்திரன்**
**பூநகரிப் பிரதேச செயலர்,**
**பூநகரிப் பிரதேச செயலகம்,**
**பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழாவை இனிதே நிறைவாக்க நன்னெறிப்படுத்திய குருவின் ஆசியுரை

இலங்கை மணித்திருநாடு சிவபூமி என திருமூலரால் சிறப்பித்து அழைக்கப்பட்ட நாடாகும். இதனை உறுதி செய்யும் முகமாக பாடல்பெற்ற சிவத்தலங்கள், பல சைவாலயங்கள் நிறைந்து காணப்படுவது சான்றாகும். பூநகரிப் பிரதேசத்தில் கிராஞ்சி, மொட்டயன்குளம் பதியில் புதிதாக பெரியதம்பிரான் ஆலயும் அமைத்து, புதிதாக விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா நிறைவாகியதும் இதற்கோர் சான்றாகும். இப்பணிக்கு உதவிய அனைவரையும் பாராட்டி ஆசிகூறுவதும் சிவனருளேயாகும். இவ்வகையில் சிவப்பணி, திருப்பணி, நற்பணி, அறப்பணி என்பன ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதிய வேண்டும். இதற்கு இவ்வாலயம் ஓர் எடுத்துக்காட்டாக வளர்ச்சி பெறவேண்டும் எனவும், இக்கும்பாபிஷேகக் கிரியைகளை நெறிப்படுத்தி, ஒத்துழைத்த அனைவருக்கும், அடியார்களுக்கும் பெரியதம்பிரான் அருள் கிடைக்க ஆசி கூறுவதும் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் திருவருளே ஆகும்.

**சிவஸ்ரீ. குமார் ஹரிருவரதன் ஐயா**
**வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானம்,**
**வேரவில்,**
**பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசகர்கள், சிவப்பணியாளர்கள் உள்ளத்திலிருந்து...

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பூநகரி, கிராஞ்சி மொட்டயன்குளம் பதியில் எம்மை ஆட்கொண்டு ஆலயம் அமைக்க எம்மை நெறிப்படுத்தியது நாம் முற்பிறவியில் செய்த நல்வினையே ஆகும். இவ்வரிய பணியில் எம்மை நன்னெறிப்படுத்தி வழிகாட்டிய சிவஸ்ரீ. தி. பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. எம்மோடு இணைந்த இக்கிராம மக்கள், அயல் கிராம மக்கள் அனைவரையும் நாம் நன்றியுடன் பாராட்டுகிறோம். பெரியதம்பிரான் நன்நீராட்டு விழா நிறைவாகியதும் சிவப்பணியின் சிறப்பம்சமாகும் என எண்ணுவதும் நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகும். இவ்வகையில் இவற்றுக்கொரு நூலுருக் கொடுப்பது காலத்தின் தேவையாகும் என்பதை உணர்ந்து எம்மை இவ்வழியில் நற்பணியாற்ற உதவிய அனைவருக்கும், இக்கும்பாபிஷேகக் கிரியைகளை நெறிப்படுத்திய சிவஸ்ரீ. குமார் ஹுருவரதன் ஐயா அவர்களுக்கும், பெரியதம்பிரான் திருவருள் கிடைக்கவும், கட்டடக் கலையில் பங்குபற்றிய அனைவருக்கும், அடியார்களுக்கும் பெரியதம்பிரான் அருள் கிடைக்க ஆசி கூறுவதும் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் திருவருளே ஆகும்.

**திரு.ந.சுகுமார். திரு.ச.விஜயராசா. அடியார்கள்**
**மொட்டயன்குளம் பெரியதம்பிரான் கோயில்**
**கிராஞ்சி.**
**பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முன்னுரை

திருச்சிற்றம்பலம்

என்செய லாவதி யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செய லேஎன்று உணரப்பெற் றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே.

திருச்சிற்றம்பலம்

சைவசமயத்தில் 63 நாயன்மார்கள் 9 தொகை அடியார்கள், சந்தான குரவர்கள், (அகம் + புறம்) பிற்காலத்து தோத்திரப் பாடல்களை அருளிச் செய்த ஞானியார்கள், சித்தர்கள் என்போரின் பக்குவ நிலைகளை உணர்த்தும், 12 திருமுறைகள், பிற்காலத் தேத்திரப் பாடல்கள் அவற்றினை அருளியவர்கள், புராணம், இதிகாசம், சைவசித்தாந்த சாத்திரங்கள் அருளியவர்களின் உண்மை நிலைகளை உணர்ந்து சிந்திக்கின்ற போது எல்லாவற்றிற்கும் மூலம் முதல் நூல்களாகிய வேதம், ஆகமங்களேயாகும். எனவே ஆலயங்களில் வேதம், ஆகமங்களை முன்வைத்துச் செய்யப்படுகின்ற உற்சவங்கள் எவையாக இருப்பினும் அவை மக்களிடம் இயன்றளவு சென்றடைய வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கோடு இப்பணியை முன்னெடுக்கின்றேன்.

மொட்டயன்குளம் கிராமத்தில் பெரியதம்பிரான் ஆலயம் அமைத்து மக்கள் வழிபாட்டிற்கு உதவுவதற்கு சிவப்பணி புரிந்த அனைவருக்கும் சிவனருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். நித்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டில் ஆலயங்கள், வீடுகள் என்பவற்றில் சுயமாகவும் சமூகத்திற்குப் பொருத்தமாகவும் சைவநெறி நின்று வாழ்வதற்கு ஏற்ற வகையில் சிறியதொரு "சைவசமய வழிபாடு" என்னும் நூல் வெளிவருவது சைவ மக்களின் தவப்பயனேயாகும்.

இவ்வாயலத்தின் வரலாற்றுச் சுருக்கம், எந்தவொரு ஆலயத்திலும் பூசைகளைச் செய்வதற்குரிய முறையில் தோத்திரங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இவற்றை மக்கள் தவறாது பின்பற்றினால் நன்மக்களாக வாழ்வார்கள் என்பது உறுதியாகும். இவ்வகையில் இந்த நூலுருவிற்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள், பாராட்டுக்கள் என்பவற்றை வழங்கிய அனைவருக்கும் நன்றியுடன் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். பூசகர்களான ந.சுகுமார், ச.விஜயராசா இவர்கள் இந்நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தமையும் இறையருள் கைகூடியமையும் இந்நூல் உருப்பெறுவதற்குச் சான்றாக அமைந்துள்ளன. அனைவரும் இந்நூலினைப் பெற்று இறையருள் பெறவேண்டுமென வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் திருப்பாதம் பணிந்து மாதா, பிதா, குரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள் அருளாசியுடன் இறைஞ்சுகின்றேன்.

**ஈழவூர் சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர்,**
**சைவ சிவாச்சாரியார், இந்து தர்மாசிரியர்**
**சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா** (MA, JP)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு மொட்டயன்குளம் பெரியதம்பிரான் ஆலய வரலாறு

பூநகரி, பல்லவராயன்கட்டு மேற்கு நோக்கி அமைந்த கிராமங்கள் பல உள்ளன. சம்புவெளி, சிவபுரம், கிராஞ்சி, பிருந்தாவனம், மொட்டயன்குளம் வேரவில், மாதிரி கிராமம், வலைப்பாடு, பொன்னாவெளி, கீரிக்குடா, பாலாவி என்பனவாகும்.

தென்னை, பனை, கடல்வளம், மருதநிலம், சிறுதானியச் செய்கை என்பன இயற்கை வளங்களாக அமைந்துள்ள பிரதேசமாகும். மக்களின் வாழ்வாதார வளங்களாக இவற்றை நோக்க முடிகின்றது. பழமையான சைவாலயங்கள், கல்விக்கூடங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் என்பன அமைந்து மக்களை நன்னெறிப்படுத்தி வருகின்றன. மொட்டையன்குளம் கிராமம் ஆரம்பித்து அண்ணளவாக 55 வருடங்கள் நிறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலத்தில் திருவருள்சேர் அமரர் கதிரவேலு திருநீலகண்டர் ஐயா அவர்கள், மொட்டையன்குளம் பிரதான வீதி அருகே கதிர்காமத்தில் தரிசனத்தில் கிடைத்த வேல் ஒன்றையும் விநாயகப் பெருமானையும் வைத்து வழிபாடு செய்து வந்தார். இரண்டொரு வருடங்களில் அவ்வாலயம் துர்நடத்தைக்காரர்களின் செயற்பாட்டால் கைவிடவேண்டி ஏற்பட்டது. ஆலயம் இடம்மாறி சிவபுரம் ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயமாக திருநீலகண்டர் பாலசுப்பிரமணியம் அவர்களின் நெறிப்படுத்தலில் தற்போது உள்ளது.

2005ம் ஆண்டு நடேசு சுகுமார் மீது கலை வருவது கண்டு அவரது தந்தையார் நடேசு என்பவர் மனம் புண்பட்டுச் சிந்தனையில் மூழ்கியவராக இறைவழிபாட்டில் தம்குலதெய்வத்தை நொந்து நொந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமுருகிப் பிரார்த்தனை செய்து வந்தார். கிராஞ்சி அருணன் ஆறுமுகம் என்பவர் வீட்டுக்குச் சென்றபோது அவரது வளவுக் காணியில் கல்லொன்று கண்ணுக்குத் தென்பட்டது. அக்கல்லு சிவன் முகமாக இவருக்கு காட்சி கொடுத்தது. அக்கல்லை எடுத்துவந்து தனது மகன் சுகுமாரிடம் கொடுத்து வழிபாடு செய்ய வழிகாட்டினார். இப்போதைய ஆலயக் காணியுள் நிற்கின்ற ஆலமரத்தின் கீழ்வைத்து குலதெய்வமான பெரிய தம்பிரான் மூர்த்தமாக எண்ணி அக்கல்லை வைத்து வழிபாடு செய்து வந்தனர். 2006ம் ஆண்டு கொட்டில் போட்டு பொங்கல் வழிபாட்டை ஆரம்பித்து செய்து வந்தனர். பரிவார மூர்த்திகளாக பத்திரகாளி, விநாயகப் பெருமான், முருகன், நாகதம்பிரான், கரும்புக்காரன் என்பன அமைய வழிபாடும் தொடர்ந்தது. இடம்பெயர்வின் பின்னரும் 2011ம் ஆண்டுப் பொங்கல் விழாவிற்கு வருகைதந்த சரவணமுத்து விஜயராசா என்பவர் மீது கலைவர ஆரம்பித்தது. அவர் இவ்வாலயத்துடன் முற்றுமுழுதாக இணைந்து கொண்டார். பெரியதம்பிரானும் இவரை ஆட்கொண்டுவிட்டார். இவ்வாலயத்திற்கான இப்போதைய நாகதம்பிரான் உருவமானது கிராஞ்சி முருகன் இராசன் என்பவர் கிணறு வெட்டிய போது தென்பட்டது. அக்கல்லை அகற்றாது கிணறு கட்ட முற்பட்டனர். கிணறு கட்டக்கட்ட தடைகள் வருவதும், இடிந்து விழுவதுமாக இருந்தமையால் அக்கல்லை பலரது பேருதவியுடன் வெளியே கொண்டு வந்து சேர்த்த பின்னர் கிணற்று வேலை பூர்த்தியானது. இந்தநிலையில் முருகன் இராசன் சுகுமாரிடம் இச்செய்திகளைக் கூறினார். அக்கல்லு நாகதம்பிரான் திருவுருவாக இருப்பதனால் அதனை பெரியதம்பிரான் ஆலயப் புற்றடியில் வைத்து விபாடு செய்ய வழிசெய்தனர். இப்போதும் அக்கல்லு உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் அமைக்கும் பணியில் 2016ம் ஆண்டு பங்குனி உத்தர நன்னாளில் விஜயராஜா அவர்களின் முதல் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. இவர்கள் கண்ட கனவின் வெளிப்பாட்டில் ஆசாரா சீலர்களே திருப்பணி செய்ய முடியும் என்பதையும் பெரியதம்பிரான் நல்வழி காட்டினார் என்பதையும் உணரமுடிகின்றது. இவ்வகையில் புதிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை, திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா என்பவற்றை சிவஸ்ரீ.தி.பாலசுப்பிரமணியம் ஐயா அவர்கள் முன்னின்று நெறிப்படுத்தி 08.09.2016 இல் நிறைவாக்கியமை பெரியதம்பிரான் திருவருளேயாகும். இவ்வகையில் இவ்வரிய கைங்கரியத்தில் இக்கிராம மக்கள், அயலில் உள்ளவர்கள் எல்லோரினதும் ஒத்துழைப்பு இன்று ஆலயமாக மிளிர்கின்றமை சைவமக்களின் வாழ்வியலை சிறப்பம்சமாக உயர்த்தி நிற்கின்றமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

**வரலாற்றுச் சுருக்கத் தகவலிற்கு உடந்தையானவர்கள்**

**சரவணை நடேசு**

**நடேசு சுகுமார்**

**சரவணமுத்து விஜயராசா**

**திருநீலகண்டன் பாலசுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. பூசைக்குரிய பாடல்கள்

### தூபம் காட்டும் பொழுது

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

### அடுக்கு விளக்குக் காட்டும் பொழுது

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பனைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா நான்முகனும்
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறை மலர்க்குருந்த மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

### குட விளக்குகள் காட்டும் பொழுது

ஒளிவளர் விளக்கே! உலாப்பிலாவொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தேளிவளர்ப்பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும்தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக்கனியே
அம்பலம் டேரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பூர நெய் விளக்கு காட்டும் பொழுது

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சித்தபின் மேலாம்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி.

ஆலந்தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்த லிங்கம் பாலொளியாம்
மத்தனை கூடல் மதுராபுரி உமையாள்
அத்தனே ஆலவாயா.

## மூன்று விளக்கு காட்டும் பொழுது

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

## ஐந்து விளக்குக் காட்டும் பொழுது

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளற் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே.

## நைவேத்தியம் படைக்கும் போது

ஆலந்தான் உகந்து அமுது செய்தானே
ஆதியை அமரர் தொழு தேத்துஞ்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலால் உமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாராதனையின் போது பாட வேண்டியவை

உலகெலாம் அன்பு மேவி ஒருகுலமாக வாழ்க!
கலக்கமுற் துயரும் வீழ்க கருணையும் களிப்பும் பொங்க
தலமொல்லாம் விளைய ஞால ஞாயிறு பொலிய நாளும்
இலகுவாய் சுத்த ஜோதி இறைவனே போற்றி போற்றி.

ஒள்ளிய துரிய வானில் ஓங்கிடும் ஜோதி வாழ்க!
தென்னியர் உள்ளே அன்பாய் திகழ்பரஞ் ஜோதி வாழ்க!
உள்ளமே தில்லையாக ஓமொலி இசையதாக
துள்ளிநன் டைனமாடும் தூயசிற் ஜோதி வாழ்க!

## காலையில் வெளியே தொழிலுக்கோ அல்லது வேறு ஏதும் தேவைக்குப் போக வேண்டியிருந்தால் திருமூலரின் பின்வரும் பாடலை பாடி போகவும்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

## உணவு உண்ண முன் பாடவேண்டியது நாவுக்கரசரின் பாடல்

அன்னம் பாலிக்குத் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

## மாலையில் விளக்கு ஏற்றும் போது பாட வேண்டியது

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரவில் துயில்கொள்ளப் போகும் முன் மாணிக்கவாசகரால் பாடிய திருவாசகத்தை பாடி துயில் கொள்ளவும்.**

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லாய்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விடுப்பன்றே.

## காரைக்கால் அம்மையார் பற்றிச் சேக்கிழார் சுவாமிகளின் பாடலை பாடவும்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீஆடும் போதுன் அடியின்கீழிருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. பிள்ளையார் பூசையின் போது போற்றி துதிக்கவும்

ஜெய ஜெய கணேச ஜெய ஜெய கணேச பாஹிமாம்
ஜெய ஜெய கணேச ஜெய ஜெய கணேச ரக்ஷமாம்

சிந்தித் தவர்க்கருள் கணபதி போற்றி போற்றி
சீரிய ஆனைக் கன்றே போற்றி போற்றி
அன்புடை அமரர்கட் காப்பாய் போற்றி போற்றி
ஆவித் துணையே கணபதி போற்றி போற்றி
இண்டைச் சடைமுடி இறைவா போற்றி போற்றி
ஈசன் தந்தருள் மகனே போற்றி போற்றி
உன்னிய கருமம் முடிப்பாய் போற்றி போற்றி
ஊர் நவசந்தி உகந்தாய் போற்றி போற்றி
எம்பெருமானே இறைவா போற்றி போற்றி
ஏழுலகுந் தொழ நின்றாய் போற்றி போற்றி
ஐயா கணபதி நம்பியே போற்றி போற்றி
ஒற்றை மருப்புடை வித்தகா போற்றி போற்றி
ஓங்கிய ஆனைக் கன்றே போற்றி போற்றி
ஔவிய மில்லா அருளே போற்றி போற்றி
அக்கரவத்து வானவா போற்றி போற்றி
கணபதி என்வினை களைவாய் போற்றி போற்றி
ஙப்போல் மழுவென் றேந்தியே போற்றி போற்றி
சங்கரன் மகனே சதுரா போற்றி போற்றி
ஞய நம்பினார் பாலாடியே போற்றி போற்றி
இடம்படு விக்கின விநாயகா போற்றி போற்றி
இணங்கிய பிள்ளைகள் தலைவா போற்றி போற்றி
தத்துவ மறைதெரி வித்தகா போற்றி போற்றி
நன்னெறி விக்கின விநாயகா போற்றி போற்றி
பள்ளியி லுறைதரும் பிள்ளாய் போற்றி போற்றி
மன் றுளாடும் மணியே போற்றி போற்றி
இயங்கிய ஞானக் குன்றே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவக். கிண்கிணி ஆர்ப்பாய் போற்றி போற்றி
இலகக் கொம்பொன் றேந்தியே போற்றி போற்றி
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் போற்றி போற்றி
அழகிய ஆனைக் கன்றே போற்றி போற்றி
இளமத யானை முகத்தாய் போற்றி போற்றி
இறகுபதி விக்கின விநாயகா போற்றி போற்றி
ஆனந்த லோடாதியின் அடிதொழ வருமே.

## 3. ஏகவிம்சதி (21) நாமாவளி

ஓம் கணபதயே நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் அமோசாய நம:
ஓம் தரணீதராய நம:
ஓம் கலாதராய நம:
ஓம் காசிபந்தன விநாயாய நம:
ஓம் மஹா கணபதயே நம:
ஓம் க்ஷிப்ரப்ரசாதாய நம:
ஓம் ஆசாபூலகாய நம:
ஓம் வரதாய நம:
ஓம் ஜயாய நம:
ஓம் அம்ருத மந்தராய நம:
ஓம் லக்ஷகணபதயே நம:
ஓம் வர்ஜிதாய நம:
ஓம் பீஜ விநாயகாய நம:
ஓம் மங்கல விநாயகாய நம:
ஓம் துண்டி விநாயகாய நம:
ஓம் ப்ரிய கணபதயே நம:
ஓம் சித்த விநாயகாய நம:
ஓம் சிந்தாமணி விநாயகாய நம:
ஓம் மதோற்கட விநாயகாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. விநாயகர்

1. ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கின்றோமே.

2. பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

3. திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகடச் சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்

4. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

5. பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

6. ஓரானை கன்றை உமையாள் திருமகனை
பேரானை கற்பகத்தை பேணினால் வாராத
புத்திவரும் வித்தைவரும் புத்திர சம்பத்துவரும்
சக்திதரும் சித்திதருந் தான்

7. அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம் நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்
கணபதியை கை தொழுதக் கால்

8. முன்னவனே! யானை முகத்தவனே! முக்திநலம்
சொன்னவனே! தூயமெய்ச் சுகதத்தவனே! மன்னவனே
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே! நின்தாள் சரண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சிவன் பஜனைப் பாடல்கள்

பாட்டு - 1

ஆடிடும் பெருமான் நடமாடிடும் பெருமான்
ஆடாதாரை ஆடவைத்து தானும் ஆடும் பெருமான் (ஆடிடும்)

காணாதாரை காணவைத்து காட்சிதரும் பெருமான்
பாடாதாரை பாடவைத்து பாட்டிசைக்கும் பெருமான் (ஆடிடும்)

கூடாதாரை கூடவைத்து கூத்தாடும் பெருமான்
கேளாதாரை கேட்கவைத்து தானும் கேட்கும் பெருமான் (ஆடிடும்)

சேராதாரை சேரவைத்து தானும் சேரும் பெருமான்
நாடாதாரை நாடவைத்து நடனமாடும் பெருமான் (ஆடிடும்)

சங்கரசிவ, சங்கரசிவ, சங்கர சிவசம்போ (சங்கர)
ஜெயசங்கர, ஜெயசங்கர, ஜெயசங்கர சம்போ (ஜெய)
சங்கரசிவ, சங்கரசிவ, சங்கர சிவசம்போ (சிவசங்கர) (ஆடிடும்)

நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா சிவகாமிப்ரியா நடராஜா
பரமேசா பரமேசா பார்வதி நாயக பரமேசா
கங்கேசா கங்கேசா கிரிஜா ரமண கங்கேசா

பாட்டு - 2

அரஹர சிவசிவ அம்பலவாணா
ஆனந்த தாண்டவ அம்பலவாணா (அர)

தில்லையம்பல அம்பலவாணா
சிவகாமி நேசா அம்பலவாணா (அர)

கற்றை சடையோனே அம்பலவாணா
கனக சபேசா அம்பலவாணா (அர)

சிற்சபேசா அம்பலவாணா
சிதம்பர நேசா அம்பலவாணா (அர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம் பலவனே அம்பலவாணா
வெள்ளியம் பலவனே அம்பலவாணா (அர)

அம்பலவாணா அம்பலவாணா
ஆடியபாதா அம்பலவாணா (அர)

பாட்டு - 3

ஓம் சிவாய நமசிவாய ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

பார்வதி மணாளனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

கங்கையை தரித்தவனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

ஆடும்பாம் பணிந்தவனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

தில்லையின் நடராஜனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

நெல்லையின் அப்பனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௬. அம்பாள் துதிகள்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே 1

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்குமருந்தே அமரர்பெரு விருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே 2

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலா ளபிராமி கடைக்கண்களே. 3

விழிக்கே அருளுண்டாம் அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டெமக்கு வழிகிடக்கப்
பழிக்கே கழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினிலே 4

பூத்தவளே புவனம் பதிநான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரத்தவளே கறை கண்டனுக்கு
மூத்தவளே என்றும்மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே! உன்னை யன்றி மற்றதோர் தெய்வம் வந்திம்பதோ 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. காளி அம்மன்

பாட்டு - 1

அஞ்சாத செஞ்சடைச்சி மாகாளி
ஆதிசிவன் பத்தினியே திரிசூலி (அஞ்சாத)

கொஞ்சும் சதங்கைஒலி கேட்குதம்மா - உன்
கொடை கூத்துக் கண்டுமனம் குளிருதம்மா (அஞ்சாத)

திருச்சடையை அலங்கரிக்கும் ஆயிரம் நாகம் உன்
தேகமெல்லாம் விளையாடும் பலவகை நாகம் (அஞ்சாத)

செவ்வரளி மாலை போட்டு மாகாளி உனக்கு
செய்திடுவேன் பூஜைதனை திரிசூலி (அஞ்சாத)

முல்லைபூ மாலை போட்டு மாகாளி உந்தன்
மலரடியை தொழுதிடுவோம் திருசூலி (அஞ்சாத)

வையகம் தன்னிலேதான் மாகாளி உன்னை
வணங்காத பேர்களில்லை திரிசூலி (அஞ்சாத)

ஆயிரம் கண்ணுடையாள் மாகாளி அம்மா
அன்பர்களை ஆதரிப்பாய் திரிசூலி (அஞ்சாத)

வடக்குவாசல் செல்விஅம்மா மாகாளி உன்னை
வணங்காத பேர்களில்லை திரிசூலி (அஞ்சாத)

தஞ்சமென்றால் அருள்தரும் தாயேயம்மா
கொஞ்சம் கண்திறந்து எங்களைநீ பாருமம்மா (அஞ்சாத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு - 2

மாரி திரி சூலியம்மா - மேல் மருவத்தூரு காளியம்மா
தேடி உன்னைப் பாடிவந்தோம் தெய்வகாட்சி தந்திடம்மா (மாரி)

சிவப்பான ஆடைகட்டி - நல்ல சிவப்பு மணியில் மாலையிட்டோம்
சிறப்பான நோன்பிருந்து இருமுடியை எடுத்துவந்தோம் (மாரி)

ஆடிப்பூர திருவிழாவில் ஆடி ஓடி வந்தோமம்மா
கூடி நாங்க குலவையிட்டு - (கூடி) கஞ்சிகலயம் சுமந்து வந்தோம் (மாரி)

உலகமக்கள் வாழ்வதற்கு - சக்தி உருண்டுபுரண்டு வருவாளம்மா
ஊழ்வினைகள் தணிவதற்கு அன்னை உருண்டு வலம்தான் வருவாளம்மா (மாரி)

சுகவாழ்வு வாழ்வதற்கு - சக்தி சுயம்பில் பாலை ஊற்றிடுவோம்
பத்ரகாளியை வணங்கிவிட்டு பக்தியோடு வீடுசெல்வோம் (மாரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. நாகதம்பிரான்

பாட்டு - 1

ஆடு பாம்பே சுழன்றாடு பாம்பே - நீ
ஆடு பாம்பே சுழன்றாடு பாம்பே
பெரியதம்பிரான் சன்னதியில் ஆடுபாம்பே ஆதி
நீ ஆதிதம்பிரான் அருள் ஆனபாம்பே (ஆடுபாம்)

மொட்டயன்குள எல்லையிலே உள்ள பாம்பே - நீ
மக்கள் துயர் போக்கிடவே வந்தபாம்பே - (மருவ)
நல்லாரை காத்திடும் நல்லபாம்பே - (நல்ல)
நீ பொல்லாரை தண்டிக்க வல்ல பாம்பே - (நீபொல்) (ஆடுபாம்)

சித்துக்களை ஆடிநலம் தரும்பாம்பே - மெய்
பக்தியினை நாடி பலன் தரும் பாம்பே - (சித்து)
பெரியதம்பிரான் காலடியில் சாயும் பாம்பே - (தம்பிரான்)
நீ சன்னதியில் வாழுகின்ற மாயப்பாம்பே (நீசன்ன) (ஆடுபாம்)

புற்றுக்குள்ளே வாழுகின்ற பொன்னு பாம்பே - நல்ல
பக்திக்குள் அடங்குகின்ற கண்ணுபாம்பே - (புற்று)
கற்றவரும் மற்றவரும் காணும் பாம்பே - (கற்ற)
நல்ல காரியத்தை தான் முடிக்க தோன்றும் பாம்பே (நல்ல)
(ஆடுபாம்)

பூசகர் பார்வையிலே தோன்றும் பாம்பே
ஓர்பார்வைக்கே ஏங்குகின்றோம் ஆடுபாம்பே (பங்க)
சித்தம் வென்ற சித்தருக்கும் ஞானப்பாம்பே - (சித்த)
நீ சீர்திருத்தம் செய்பவர்க்கும் நல்லபாம்பே - (நீசீர்) (ஆடுபாம்)

ஆக்கும் நல்ல வேலையெல்லாம் செய்யும் பாம்பே
நீயாருக்கும் அஞ்சாமல் ஆடுபாம்பே - (ஆக்கும்)
வீதியெல்லாம் ஊர்ந்து வினை ஓட்டும் பாம்பே (வீதி)
பொல்லா வீணர்களை தீண்டி பழிதீர்க்கும் பாம்பே (பொல்) (ஆடுபாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. முருகன் ஸ்லோகங்கள்

பாட்டு - 1

நாள் என்செயும், வினைதான் என்செயும், எனை நாடிவந்த
கோள் என்செயும், கொடுங்கூற்று என்செயும், குமரேசர் இரு
தாளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும், சண்முகமும்
தோளும், கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே

வேல்பட்டு அழிந்து செந்தூர் வயல்பொழில், தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடியார் மனம், மாமயிலோன்
வேல்பட்டு அழிந்து வேலையும், சூரனும், வெற்பும் - அவன்
காவல்பட்டு அழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே

விழிக்குதுணை திருமென்மலர் பாதங்கள், மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குதுணை அவன் பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே

சேந்தனை, கந்தனைச், செங்கோட்டு வெற்பினைச், செஞ்சுடர்வேல்
வேந்தனைச், செந்தமிழ் நூல்விரித்தோனை, விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சார்ந்துனை ஒருபோதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே

உருவாய், அருவாய், உளதாய், இலதாய்,
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்,
கருவாய், உயிராய், கதியாய், விதியாய்,
குருவாய், வருவாய், அருள்வாய் குகனே

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூற மடியார்கள் வினைதீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேணும்
ஆதி யருணாசல மமர்ந்த பெருமாளே.

ஒருமையுடன் நினது மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்

உள்ளொன்று வைத்து புறமொன்று
பேசுவார் உறவு கலவாமை வேண்டும்

பெருமை பெறு நினதுபுகழ் பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்க வேண்டும்

பெருநெறி பிடித்தெழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்

மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவா திருக்க வேண்டும்

மதி வேண்டும் நின் கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வில் நான்வாழ வேண்டும்

தருமமிகு சென்னையில் கந்ததோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே

தன்முகத் தூயமணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

ஆறிருதடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க
வெற்பைக்கூறு செய்தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க மாறிலா வள்ளி வாழ்க வாழ்க
வாழ்கவே வாழ்க சீரடியாரெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு - 2

வேல் வேல் வேல் வேல் வேலாயுதா
வேங்கைமர மானவரே வேலாயுதா (வேல் வேல்)

வேல் வேல் வேல் வேல் வேலாயுதா
வேதனைகள் தீருமையா வேலாயுதா (வேல் வேல்)

அருட்சுடராய் வந்தவரே வேலாயுதா
ஆறுமுக மானவரே வேலாயுதா (வேல் வேல்)

திருச்செந்தி லதிபனே வேலாயுதா
தெய்வயானை மணாளரே வேலாயுதா (வேல் வேல்)

குன்றக்குடி குமரனே வேலாயுதா
குறவள்ளி மணாளரே வேலாயுதா (வேல் வேல்)

கருணையோடு காத்தருள்வாய் வேலாயுதா
உன்னைத் தெண்டனிட்டோம் வேலாயுதா (வேல் வேல்)

பாட்டு - 3

பாசி படர்ந்தமலை பங்குனித்தேர் ஓடும்மலை
ஊசி படர்ந்தமலை உத்திராட்சம் காய்க்கும்மலை
அரோகரா... அரோகரா... அரோகரா... அரோகரா... அரோகரா...

மலைக்குள் மலைநடுவே மலையாள தேசமப்பா
மலையாள தேசம்விட்டு மயிலேறி வருவாயப்பா (அரோகரா)

அந்தமலைக் குயர்ந்தமலை ஆகும்இந்த பழனிமலை
எந்தமலை கண்டுநான் ஏறிடுவேன் சபரிமலை (அரோகரா)

ஏறாத மலைதனிலே ஏறிநின்று தத்தளிக்க
பாராமல் கைகொடுப்பாய் பழனிமலை வேலவனே (அரோகரா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலெடுத்து கச்சைகட்டி விதவிதமாய் மயிலேறி
கோலா கலத்துடனே குழந்தைவடி வேலவனே (அரோகரா)

உச்சியில் சடையிருக்க உள்ளங்கையில் வேலிருக்க
நெற்றியில் திருநீறிருக்க நித்தப்பா சங்குநாதம் (அரோகரா)

காசியப்பா உன்கோமான் தங்கமப்பா உந்தன்நிறம்
பாவிநான் உன்னைக்காண காவிகட்டி வாரேனப்பா (அரோகரா)

பாட்டு - 4

வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே - அந்த
கந்தனுண்டு கவலையில்லை மனமே (வேலுண்டு)

உலகமெனும் கடல்தனிலே உடலென்னும் ஓடமது
உன்னடிக் கரையடைய அருள்வாய் - முருகா
உன்னடிக் கரையடைய அருள்வாய் (வேலுண்டு)

ஊனுடலை வளர்ப்பதற்கு ஒவ்வொருநாளும் கழித்தேன்
உன்னருள் வளரவழி உணர்கிலேன் - முருகா
உன்னருள் வளரவழி உணர்கிலேன் (வேலுண்டு)

ஓயாது ஒழியாது உன்நாமம் சொல்பவர்க்கு
உயர்கதிதான் தந்திடுவாய் முருகா - நீ
உயர்கதிதான் தந்திடுவாய் முருகா (வேலுண்டு)

கருணையே வடிவமான கந்தசாமித் தெய்வமே
கழலடியைத் தந்து எனை ஆளுவாய் - முருகாஉன்
கழலடியைத் தந்து எனை ஆளுவாய் (வேலுண்டு)

பாட்டு - 5

பழனியிலே முருகனுக்குக் கொண்டாட்டம்
சபரியிலே ஐயனுக்குக் கொண்டாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் அபிஷேகம் பழனியிலே - பசும்
நெய் அபிஷேகம் சபரியிலே (பால்)

சரவணன் பிறந்தது பொய்கையிலே - அந்த
மணிகண்டன் பிறந்தது பம்பையிலே (பால்)

முருகனின் வாகனம் மயிலாகும் - நம்
ஐயனின் வாகனம் புலியாகும் (பால்)

காவடி எடுப்பது பழனியிலே
இருமுடி சுமப்பது சபரியிலே (பால்)

அரோகரா ஒலிப்பது பழனியிலே
சரண கோஷம் ஒலிப்பது சபரியிலே (பால்)

1. ராகம் - பேஹாக் தாளம் - ஆதி

கார்த்திகேயா கலியுக வரதா கந்தா முருகா!
கதிர்வடி வேலா! (கார்த்தி)

தோத்திரஞ் செய்துனைத் துதித்தோம் காவாய்
தூய்மையும் அன்பும் துலங்கிடச் செய்வாய் (கார்த்தி)

சாத்திரக் கோத்திரச் சண்டையைத் தீர்ப்பாய்
சன்மார்க்க மொன்றே சகமிசைக் காப்பாய் (கார்த்தி)

பாரில் உனையே பணிந்திட வைப்பாய்
பக்தர்கள் கூட்டம் பரவிடப் பணிப்பாய் (கார்த்தி)

சீருடன் ஆத்ம சித்தியும் தருவாய்
பேரும் புகழும் பிணியாது காப்பாய் (கார்த்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வக் கனலை அடியார்க் கீவாய்
அவனியில் அமைதி ஆண்டிட அருள்வாய் (கார்த்தி)

கார்மழை போல்நின் கருணையைப் பொழிவாய்
காங்கேயா ஷண்முகா கதிர்காமத் தேவே! (கார்த்தி)

2. ராகம் - தேசிகதோடி தாளம் - ஆதி

கந்தா கடம்பா கார்த்திகேயா!
கலியுக வரதா கதிர்காமா! (கந்தா)

தேவர்கள் துயர்தனை நீக்கிடவே
திரு அவதாரம் செய்தாயே
சங்கரன் மைந்தனாய் வந்துதித்தே
சரவண பொய்கையில் வாழ்ந்தாயே (கந்தா)

சூர பத்மனை ஸம்ஹரித்த
வழுரா தீரா வெற்றிவேலா!
வள்ளிப் பெண்ணைத் தினைப்புனத்தில்
கொள்ளை கொண்ட கள்வனாய்! (கந்தா)

அருண கிரியுள் சரணெனவே
கருணை யுடனே ஆண்வந்தாய்!
நக்கீ ரனுக்கு அருள் புரிந்தே
பக்தி யோடுனைப் பாடவைத்தாய்! (கந்தா)

முருகா முருகா என்றிடவே
முருக னாய்வந் தருள்புரிவாய்!
கதிர்கா மந்தனில் எழுந்தருளி
காந்தம் போலே கவருகின்றாய்! (கந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. நாமாவளிகள்

முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!

கதிநீ மதிநீ கதிர்வேல் முருகா
துதிசெய் அடியார் துணைநீ அரசே
விதிசெய் வினையும் விலகப் புரிவாய்
புதிதா கியவாழ் வருள்புங் கவனே! (முருகா)

சக்திக் கனலே சமர்செய் பகையைக்
குத்திக் குமுறும் கொதிவேற் கரனே
தொத்தித் தொடருந் துயரங் களைவாய்
பக்தர்க் கருளும் பரமன் மகனே! (முருகா)

அருளார் முகமும் அடியார்க் கபயம்
தருபொற் கரமும் தணலார் விழியும்
கருணை பொழியக் கனிவாய் நகையும்
திருமார் பழகுந் திகழும் முருகா! (முருகா)

அன்பர்க் கெளிதாய் தருவாய் அபயம்
நம்பன் உமைநா தன்அருட் கனலே
உன்பா தம்உளத் தினில்ஊன் றிடவே
என்பால் குருவாய் வருவாய் இறைவா! (முருகா)

இரவும் பகலும் இதயத் துணையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்
புரியுந் தொழில்யா வையும்பூ சனையாய்ப்
புரியும் படிசெய் பரிபூ ரணனே! (முருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ஸ்ரீ பைரவர் சுவாமி வழிபாட்டுப் பாடல்கள்

பரமனை மகத்திடாப் பங்கையாசன்
னெருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சிலப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர் படிவமேற் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்க ளேத்துவோம்

எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர்வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமையவன்றே
தெளியு மாவலியைச் செற்றேற் செகுத்துரிக் கவயம் போர்த்த
வளியுளர் கச்சிகாவல் வயிரவர்க் கன்புசெய்வோம். 1

சென்றன னெதிரா நின்றே ராவணச் செருக்கி னிற்கு
மன்றளந் துளவினாற்கு மாமயக் கொழிய நேரா
வின்றியல் பிறவுஞ் சொன்னா ன:.தவன் சிறிதுமெண்ணான்
கன்றிய வெகுளி மிக்கான் வயிரவக் கடவுட் செல்வன் 2

பற்றினன் வயிரத் தண்டம் பகிரண்டமதிர வோச்சிசிச்
சுற்றின னுருமுக்காலத் தெழித்தனன் றுளவமார்பி
னெற்றின னெற்றலோடு மெறிபடு சண்டவாயு
முற்றுற விற்று வீழு மூரிவெங் கிரியிற் சாய்ந்தான். 3

கருநிறக் கமஞ்சூன் கேக் காரதளுரித்து வாங்கித்
திருநிறத் தமைபக் காள கஞ்சுக மென்னச் சேர்த்தி
வெரிநுறப் பிடுங்கு மென்பு தண்டென விடுத்துக் கொண்டாள்
மருமலர்த்துளவ மாயோனாவை மயக்கந்தீர்ந்தான். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிமை துயர்த்த வண்ண லிரும்பவந் தொலைப்ப வேனைப்
பகவர் தமகந்தை மாற்றப் பண்ணவர் மதர்ப்புஞ் சிந்த
மிகுபெருங் கருணை தன்னால் வேதநாயகனுள்ளத்து
மகிழ்வொடு புரிந்தா னென்ப வயிரவக் கடவுடன்னை 5

நீலுறு சுடரின் மெய்யு ஞெகிழிக ளாற்றுந் தாளு
மாலம துயிர்க்குஞ் செங்கேமுரவ வெற்றரையுஞ் சென்னி
மாலைகளநந்த கோடி வயின் பெயரு மார்புஞ்
சூலமும் பாசு நாணுந் துடியு மேந்திப பொற்றேளும். 6

முக்கணுந் திங்களே போன் முளைத்த வாளெயிறும வன்னிச்
செக்கரஞ் சடையின் சீருஞ் செயிர் கெழுநகையு மாக
வுக்கிர வடிவு கொண்டாங் குதித்திடு வடுகன் றன்னை
மைக் கிளர் கண்டத் தெந்தை நோக்கி யேவகுத்துச் சொல்வான்.7

திகழ்ந்த நஞ்சிறுவனாகுஞ் செங்கமலத் தோன் சென்னி
யஜகழ்ந்தது நம்மை யுச்சியிருந்ததே யதனை வல்லே
யகழ்ந்தனை கரத்திலேந்தி யவனுயிர் நல்கித் தம்மைப்
புகழ்ந்திடு முனிவர் தேவர் புரந்தொறும் போதியன்றே 8

போந்தனை யனையர் தங்கள புலவுடற் சோரி தானே
வாய்ந்த தோ ரையமாக வாங்குதி வாங்கும் வேலை
வீந்தவர் தமக்கு மீட்டும் வியனுயி ருதவி யன்னே
ராய்ந்திடு மகந்தை மாற்றி யண்டமேலடைதி யம்மா 9

பொறியுறு முயிர்களும் புவனம் யாவையு
மிறுதியா யழிவுறுமீமத் தெல்லையின்
மறையெனு ஞாளியை யுயர்த்து மற்றவ
னுறுவதோர் மகிழ்ச்சியாலுலவு மென்பபே 10

சூடுவன் நெஞ்சிடை வைப்பள் பிரான் என்று
பாடுவன் பன் மலர் தூவிப் பணிந்து நின்
றாடுவன் ஆடி அமரர் பிரான் என்று
நாடுவன் நாளின் றறிவது தானே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி என் பார்அம ர்புனி தன் அடி
போற்றி என் பார் அசுரர் புனி தன் அடி
போற்றி என் பார் மனிதர் புனிதன் அடி
போற்றி என் அன்புன் பொ லியவைத் தேனே 12

நின்ற வயிரவி நீலி நிசாசரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்றருள் ஞாலத்து நாடிடுஞ் சாற்றியே. 13

நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது வுண்ணும் பொழுது
படர்ந்த வுடல்கொடு பந்தாடலாமே 14

ஆமேவப் பூண்டருளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக் கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தோடு வாளதுகையே 15

கையவை யாறுஞ் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவா
துய்யருள்ளத்தில் துளங்கு மெய்யயுற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே 16

உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காக
உடல் சுழன்றால் வேட உடனே சுழலும்
உடலுயிர் உண்மையென றேர்ந்துகொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டையொத்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. சமர்ப்பணம்

எனக்கெனச் செயல் வேறிலை யாவுமிங் கொருநின்
தனக்கெனத் தகும் உடல் பொருளாவியும் தந்தேன்
மனத் தகத்துள அழுக்கெலாம் மாற்றி எம்பிரான்
நினைத்த தெப்படி யப்படி யருளுத னீதம் 1

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே. 2

## 12. மங்களம்

திருச்சிற்றம்பலம்

அன்னை அன்னை அன்னை அன்னை அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் அந்த ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சை யாவும் ஊட்டிவிக்கும் சிற்பவைக்கு மங்களம்
உருகாத நெஞ்சம் உன்பால் உருகிற்ற உருக்கத்தாலும்

பெருகாத கண்ணீர் பெருக்கிற்ற பெருக்கால் முன்னம்
சருகாத ஞானம் பூத்துத் தழைத்தின்ப கனியாய்க் காண
பருகாத மருதத் தேனை பருகினேன் பயன்பெற்றேனே
எப்பிறப்பும் எய்தேனோ இயற்கையான சித்தியை

இப்பிறப்பில் என்கரத்திசைந் தளிக்கும் சக்தியாம்
பஞ்சபூத பேதமாய் பிரபஞ்சமாய் ப்ரசண்டமாய்
விஞ்சினாள் எனக்கு யோகவீரளத்த தன்மையால்
தாழ்விலாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வினால் பயன்களும் என்வாக்கிலே வரங்களும்
பக்தியில் கசிந்தளித்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க்கு அனேகபோக பாக்கியங்கள் மேன்மையும்
என்றும் ஓங்க என்கரத்தியற்கையான சித்தியை

தந்துஞான மூர்த்தியாய் தணித்து வைக்கும் சக்தியாம்
நாமகீர்த்தனம் பரந்து நாடெலாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெலாம் விளங்கவும்
ஞானதீப மேற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்.
தர்மசக்தி வாழ்கவென்று சந்ததம் கொண்டாடுவோம். (அன்னை)


வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக. உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சத்தியா பிரிண்டேர்ஸ், யாழ். 0771386661

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org